DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - CMP.No. 476/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Defence PW2

Name : Anand

Father Name /
Husband Name : VAithiyalingam

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 06th October 2025.

நான் கொங்கம்பாளையத்தில் வசித்து வருகிறேன். காளியம்மாள் என்பவருக்கு இரண்டு பேரப்பிள்ளைகள் உள்ளனர். அந்த பேரப்பிள்ளைகள் தான் காளியம்மாளை அவர்கள் வீட்டில ் வைத்து பார்த்து கொண்டார்கள். அதனால் காளியம்மாளின் சொத்துக்களை லட்சமணக்கும் சீத்தாராமனுக்கும் தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதி வைத்தார். ரொம்ப வருடங்களாக காளியம்மாளின் பேரப்பிள்ளைகளான லட்சமணன் மற்றும் சித்தாராமன் காளியம்மாளை பார்த்துக்கொண்டார்கள்.

இதற்கிடையில் காளியம்மாளின் மகன் பச்சையப்பன் என்பவர் சொத்துக்கள் எங்கள் சொத்துக்கள் என்று பிரச்சனை செய்தார். அதனால் பச்சையப்பன் நீதிமன்றததில் வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கில் மேற்படி சொத்து லட்சமணன் மற்றும் சீத்தாராமனுக்குதான் சொந்தம் என்று தீர்ப்பானது. அதனால் மேற்படி நபாகள் இருவரும் காளியம்மாளின் சொத்தை அனுபவித்து வந்தார்கள்.

இதற்கிடையில் கொள்ளையில் செடிகள் இல்லையென்று இருவரும் செடிகள் வைத்தர்கள். ஆனால் அந்த செடிகளை அவ்வப்பபோது யாரோ ஒடித்து விடுவார்கள். தற்பாது அங்குள்ள மரங்களையும் யாரோ வெட்ட ஆரம்பித்தார்கள். அப்போது லட்சுமணனனும் சீத்தாராமனும் கொல்லைக்கு சென்று பார்த்தபோது பச்சையப்பன் அவர்களது ஆட்களுடன் வந்து இது என் அம்மாவின் கொல்லி நான் என்ன வேண்டுவேனாலும் செய்வேன் என்று சொன்னர். அததால் லட்சுமணன் ஆரோவில் காவல் நிலையத்தில் புகர் கொடுத்தார். அதற்கு நடவடிக்கை எடுக்காமல் நீதிமன்றத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள்.

தற்போது அந்த கொல்லியில் யாரோ வேலி அமைத்துள்ளார்கள். பச்சையப்பன் அந்த இடத்தில் இருக்கவில்லை. அவர் வேலி போட்டாரா என்று எனக்கு தெரியாது.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - CMPNo. 476 /2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Defence PW3

Name : Akash

Father Name /
Husband Name : Lakshmanan

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 06th October 2025.

நான் கோட்டக்கரை கிராமத்தில் வசித்து வருகிறேன். புகார்தாரர் எனது தந்தையாவார். எனது சிறுவயதிலிருந்தே எனது பாட்டி காளியம்மாள் எங்கள் குடும்பத்தில் பராமரிப்பில் தான் இருந்து வருகிறார். அவரது மகன் பச்சயைப்பன் அவரை பரமரிக்காதாதால் எங்கள் வீட்டு மொட்டை மாடியில் தான் இருந்தார். அவருக்கு உடல்நிலை சரியில்லாதால் நாங்கள் தான் பராமரித்து வந்தோம்.

அவர் தற்போது இறந்துவிட்டார். அவர் உயிருடன் இருந்தபோது எனது தந்தையும் எனது பெரியப்பா சீத்தாராமனும் சேர்ந்து பராமரித்ததால் அவர் சொத்தை எனது தந்தைக்கும் எனது பெரியப்பாவுக்கு எழுதி வைத்துவிட்டார். அவர் எழுதி கொடுத்த சொத்தை நாங்கள் பொதுவில் வைத்து பராமரித்து வந்தோம். அப்போது காளியம்மாளின் மகன் பச்சையப்பன் அந்த சொத்து தொடர்பாக உரிமையியல் வழக்கு ஒன்று தாக்கல் செய்தார். ஆனால் அந்த வழக்கு எனது தந்தைக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது. மீண்டும் பச்சையப்பன் மற்றொரு

உரிமையியல் வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கில் அவர் ஆஜர் ஆகாததால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

மேற்படி சொத்தை நாங்கள் தான் அனுபவித்து பராமரித்து வருகிறோம். அந்த சொத்தில் முந்திரி பயிர் செய்தோம். இந்த வருட சீசனுக்கு அறுவடை செய்யலாம் என்று சென்றபோது ஆரோவில் இருந்து சில பேர் வந்து அறுவடை செய்ய வந்தார்கள். அவர்களை நாங்கள் மறித்தபோது எங்களுக்கும் இதுக்கும் சம்மந்தமில்லை. பவுண்டேஷனனில் சென்று பேசி கொள்கிறோம் என்று சொன்னார்கள். மீண்டும் சில நாட்கள் கழித்து அந்த இடத்தில் சென்று பார்த்தபோது அனைத்து மரத்தையும் பாதி வெட்டி விட்டார்கள். வெட்டிய நபர்களிடம் சென்று பேசியபோது அவர்களுக்கும் மரத்தை வெட்டியதற்கு சம்மந்தமில்லை என்றும் பவுண்டேஷனில் சென்று பேசிக்கொள்கிறோம் என்று சொன்னார்கள்.

மீண்டும் சில 'நாட்கள் கழீத்து மரம் வெட்டப்பட்டிருப்பதை பார்த்து பவுண்டேின் சென்று பேசிக்கொள்ளலாம் என்று சென்றபோது எங்களை உள்ளே விடவில்லை. மீண்டும் சில நாட்கள் கழித்து புவண்டேஷனில் உள்ள கிருஉ்ஷணமூர்த்தியிடம் சென்று கேட்டபோது அந்த இடததை நாங்கள் வாங்கிவிட்டோம். எங்களுக்கும் உங்களுக்கும் சம்மந்தமில்லை. பச்சயப்பன்னிடம் சென்று பேசிக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்.

ஒருமுறை அந்த இடத்தில வைத்து பச்சையப்பனை பார்த்தோம். அவரிடம் கேட்டபோது இது எங்கள் சொத்து நீங்கள் நீதிமன்றம் சென்று பார்த்துகொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். தற்போது அங்கிருந்து அனைத்து செடிகளையும் வெட்டிவிட்டார்கள். அந்த இடத்தில் உள்ள அறுவடை மூலமாக வருடம் ரூ.200000/- கிடைக்கும் எனவே எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

(ஒம்)/- XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.